
# திராவிடத்தால் வாழ்கிறோம்

929

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

24

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## கழக அடித்தளத்தில் சிந்தப்பட்ட ரத்தம்!

திராவிட முன்னேற்றக் கழகம் உருவான காலம் தொட்டே, அனைத்துப் போராட்டங்களிலும் சிறுபான்மை மக்களின் பங்களிப்பும் தீவிரமாக இருந்துள்ளது. கழகத்துக்கு வெளியே இருந்து ஆதரவளித்தது மட்டுமல்ல; கழகத்தில் உறுப்பினராக இணைந்ததிலும் சிறுபான்மைச் சமூகத்தினருக்குத் தனித்த இடம் உண்டு.

இந்தித் திணிப்புக்கு எதிரான களமோ, குலக்கல்வித் திட்ட எதிர்ப்போ, கல்லக்குடி பெயர் மாற்றமோ களம் எதுவானாலும் அங்கே சிறுபான்மையினர் இருந்தார்கள். அவர்கள், சிறுபான்மையினராக அல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்பாக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, அன்றைய கழகத்தின் ‘தோழர்களாக’ இருந்தார்கள் என்பதை, மறைந்த கழக முன்னோடி தியாக மறவர் சி.சிட்டிபாபு தொகுத்த **‘தி.மு.க வரலாறு’** என்கிற நூலின் பல பக்கங்கள் சொல்கின்றன.

### திவாகரே திரும்பிப் போ!

சென்னை தியாகராய நகரில், இந்தி பிரச்சார சபா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக 09.09.1950-இல் ஒன்றிய அமைச்சர் திவாகர் வருகை தந்தார். திவாகரின் வருகை தொடர்பாக, 03.09.1950-இல் **‘திராவிட நாடு’** இதழ் தனி மலரே வெளியிட்டது. தங்க சாலை தெருவில் இருந்த தலைமை நிலையத்தில், தருமாம்பாள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திவாகருக்கு கருப்புக்கொடி காட்டுவது, என அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒன்றிய அமைச்சர் திவாகர் சென்னையில் கழக உடன்பிறப்புகளின் கருப்புக்கொடிக் கடலைக் கண்டார்.

அடுத்து, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் செல்கிறார் எனத் தகவல். அமைதி காப்பார்களா அண்ணாவின் உடன்பிறப்புகள்? நகரம் முழுவதும் துண்டுப் பிரசுரங்கள் பறந்தன. காலை 9.30 மணிக்கு அமைச்சர் வருவதாக இருந்தது. ஆனால், அதற்கு முன்னரே தெருவெங்கும் கருப்புக் கொடிகளோடு உடன்பிறப்புகள் சூழ்ந்து நின்றனர். கண்ணீர் புகைக் குண்டுகளோடு காவல்துறையும் சூழ்ந்து நின்றது.

12.30 மணிக்கு திவாகர் வரும்போது, ‘டெல்லி ஏகாதிபத்தியமே திரும்பிப்போ’ என முழக்கங்கள் காஞ்சியை அதிரச் செய்தன. அங்கு தாக்குதலுக்கு ஆளான கழக முன்னணியினரில் எத்திராஜ், மார்க், ஹெச்.எஸ்.அப்துல்காதர் ஆகியோரும் அடக்கம். எதிர்ப்பலையைத் தாண்டி கோயிலுக்குச் செல்ல முடியாமலே, சென்னைக்குத் திரும்பினார் திவாகர். மறுநாள் மாமல்லபுரம் சென்றவருக்கு, வீடுகள் தோறும் கருப்புக்கொடி வரவேற்றது.

### அடிபட்டு வளர்ந்த இயக்கம்!

இந்தித் திணிப்புக்கு எதிராக மட்டுமல்ல, அன்றைய காங்கிரஸ் ஆட்சியில் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் பறிக்கப்படுவது சர்வ சாதாரணமாக இருந்தது. நூல்களுக்குத் தடை, நாடகங்களுக்குத் தடை, பேசத் தடை என ஜனநாயகம் சிதைக்கப்படுவதை எதிர்த்தும் கழகத்தின் கருப்புக்கொடிப் போராட்டம் தொடர்ந்தது. அந்தவகையில், ஒன்றிய அமைச்சராக 24.10.1950-இல் தொடர்ந்த தீரமிக்கப் போராட்டத்தையும், கழக உடன்பிறப்புகளின் கொள்கைப் பற்றையும் காணும் வாய்ப்பை வரலாறு மேத்தாவுக்கும் வழங்கியது.

07.01.1951-இல் தமிழ்நாட்டிற்கு வந்த ஒன்றிய அமைச்சர் மேத்தாவுக்கு சென்னை, கோவை, மதுரை என சென்ற இடங்களில்



சென்னைக்கு வந்த ராஜாஜிக்கும் கருப்புக்கொடி காட்டப்பட்டது. ராஜாஜி வருவதற்குள் கூட்டத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று காவல்துறைக்குப் பெரும் கவலை. ஆனால், கலையப் போவதில்லை என உறுதியோடு நின்றனர் உடன்பிறப்புகள்.

காவல்துறை மிருகத்தனமாகத் தாக்கியதில் முன்வரிசையில் நின்ற பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் பலத்த தாக்குதலுக்கு ஆளானார். நூற்றுக்கணக்கான தோழர்கள் காவல்துறையின் தடியடிக்கு ஆளாகினர். கூட்டத்தின் முன்னணியில் நின்ற மண்ணடி ஷெரீப், எம்.ஏ.ரஸாக், வேப்பேரி ஜார்ஜ், எம்.எஸ்.காதர், ஜான், சேவியர், இப்ராகிம், அருள்தாஸ், எத்திராசு என சிறுபான்மைத் தோழர்கள் பலரும் காவல்துறையின் தடியடிக்கு ஆளாகியிருந்தனர். அதேபோல கருப்புக்கொடி காட்டச் சென்று கைதாகி சிறைப்படுத்தப்பட்டோர் பட்டியலில் மூர் மார்க்கெட் ஹெச்.அப்துல் அமீத்கான் இருந்தார்.

### திகைத்துப்போன மேத்தா

திவாகரும், ராஜாஜியும் மட்டும் கருப்புக் கொடிகளைக் கண்டு திகைக்கவில்லை. அடக்குமுறைகளுக்கு எதிராக தி.மு.கழகம்



> ஆச்சாரியாரின் சூழ்ச்சியையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, அன்றைக்கு போராட்டக்களம் அமைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

எல்லாம் கருப்புக்கொடியே கண்ணில் பட்டது. அதற்காக அரசாங்கத்தின் அதிரடிப் பரிசுகளையும் கழகத்தினர் பெற நேர்ந்தது. தடியடி, சிறை, மிரட்டல், வழக்கு, அடக்குமுறைகள் இன்னும் அதிகரித்தன. பலருக்கு கால்கள் ஒடிந்தன, எலும்புகள் நொறுங்கின. எண்ணற்றோர் இரத்தம் சிந்தினர். திண்டுக்கல்லில் பி.ஏ.காதர், மதுரையில் ஏ.எம்.பால், எஸ்.தேவ இரக்கம், யாகோப், இப்ராகிம் என பல ஊர்களில் சிறுபான்மைச் சமூகத் தோழர்களும் காவல் துறையின் அடக்குமுறைகளுக்கு ஆளாகினர்.

### மீண்டும் ஆச்சாரியாருக்கு எதிராக...

1953-இல் சென்னை மாகாண முதல்வரான ராஜாஜி, ‘தொடக்கப்பள்ளி மாணவர்கள் பாதி நாள் படித்தால் போதும், மீதி நாள் தந்தை தொழிலை, பிள்ளைகள் பார்க்க வேண்டும்’ என்று குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதைத்தான் இன்றைய மோடி அரசு, ‘புதிய கல்விக்கொள்கை’, ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற பெயர்களில் தூக்கிக்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே இந்தக் கல்விமுறையை, உடனுக்குடன் அம்பலப்படுத்தி உறுதியோடு எதிர்க்கும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான். இன்றைக்குப் போலவே ஆச்சாரியாரின் சூழ்ச்சியையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, அன்றைக்குப் போராட்டக்களம் அமைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ராஜாஜியின் இந்த அநியாய கல்விக் கொள்கையை வீடு வீடாகச் சென்று விளக்கி, பெற்றோர்களிடம் கையெழுத்து வாங்கி கல்வித்துறை இயக்குநர், முதல்வர், கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார் அண்ணா. அவ்வாண்டு ஜூன் 21-ஆம் தேதி கழகப் படை வீறுகொண்டு எழுந்தது. கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் தமிழ்நாடெங்கும் நடைபெற்றன. விழுப்புரத்தில் க.மு.உசேன் தலைமையில்தான் ஊர்வலம் நடைபெற்றது.

அதன்பிறகு ஒரு மாபெரும் போர்க்களத்திற்குத் தி.மு.கழகம் தயாரானது. தி.மு.கழகம் என்றால், சாதாரண இயக்கம் அல்ல என்று ஆட்சியாளர்களை உணரச் செய்த அந்த மாபெரும் யுத்தம் ‘மும்முனைப் போராட்டம்’. அந்தப் போராட்டத்திலும் சிறுபான்மையினர் முழுமையாகப் பங்கெடுத்தனர். அந்த வரலாற்றை அடுத்த வாரம் பார்ப்போம்.

...நீளும்

## தேர்தல் ஆணையர் நியமனத்திலேயே தில்லுமுல்லு!

மக்களைவைத் தேர்தலின்போது வாக்குத்திருட்டு நடைபெற்றுள்ளதாக ராகுல்காந்தி வெளியிட்டுள்ள ஆவணங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தேர்தல் ஆணையர் நியமனமே தில்லுமுல்லுதான் என மூத்த பத்திரிகையாளர் விஜய்ஷங்கர் எழுதிய பதிவு கவனம் பெற்றுள்ளது.

“அரசியலமைப்புச் சட்டத்தின் 324-வது பிரிவின்படி, தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு சட்டம் இல்லாத நிலையில், குடியரசுத் தலைவர் (ஒன்றிய அரசின் அறிவுரைப்படி) அவர்களை நியமிக்கலாம். இந்த முறையை எதிர்த்து, பரன்வால் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். மார்ச் 2, 2023 அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, புதிய தேர்தல் ஆணையர்கள் நியமனம் குறித்து, குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்க, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தத் தீர்ப்பை நிர்மூலம் செய்யும்விதமாக மோடி அரசு மாநிலங்களவையில் ஒரு மசோதாவை நிறைவேற்றியது. அதன்படி அந்தக் குழுவின் உறுப்பினர்களாகப் பிரதமர், ஒன்றிய அரசின் அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் இருக்கலாம் என்றானது. அதாவது, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அதில் இடமில்லை. மக்களவையும் அந்த மசோதாவை நிறைவேற்றவே, அது சட்டமானது. இந்தச் சட்டத்திற்கு எதிராக, காங்கிரஸ் தலைவர் ஒருவர் தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது.

2024 தேர்தலுக்கு இரு மாதங்களுக்கு முன்பு, ஒரு தேர்தல் ஆணையர் திடீரென ராஜினாமா செய்தார். மற்றொருவர், ஏற்கெனவே பணி ஓய்வு பெற்றுவிட்டார். புதிய சட்டப்படி தேர்தல் ஆணையரை பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி முடிவு செய்ய வேண்டும் என்றானது. எப்படி இருக்கிறது நியாயம்? புதிய நியமன சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு 48 மணி நேரங்களுக்கு முன் நள்ளிரவில் அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையரை நியமித்து விட்டனர். இதற்குப் பெயர்தான் ‘தில்லிமுல்லு’ ” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பகுத்தறிவுப் பாசறை வழியில்...



மீ.அண்ணாதுரை

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மதுரை வருகையின் போது, கழகத்திற்கு நிதி வழங்கும் நிகழ்வில், எனது தந்தையார் மீனாட்சிசுந்தரம் அவர்களும் பங்கேற்று நிதி வழங்கி இருக்கிறார். எனது தந்தையார் வங்கி ஊழியர் என்பதால், பகுத்தறிவாளர் கழகத்தில் இயங்கி வந்தார். கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் அவர்கள் மீதும் அதிக பற்று கொண்டவர். அதே வழியில் எங்களையும் வழிநடத்தினார். புகைப்படம் எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்று நினைவில் இல்லை. எங்கள் இல்லத்தையும் உள்ளத்தையும் அலங்கரிக்கும் படம் இது.

**– ஆசிரியர் மீ.அண்ணாதுரை,**
**திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 12.08.2025-இல் வெளியான கருவூலம் திருத்தத்துடன்...

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம், புதுக்கோட்டையில் நடைபெற்றது. புதுச்சேரி பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிடுவது என்று அந்தப் பொதுக்குழுவில்தான் முடிவு செய்யப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.